1978 பிப்ரவரி 28]

திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையம்.

*317 வினா : திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவண்ணாமலையில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை விரிவுபடுத்தும் நோக்கம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

(இ) திருவண்ணாமலை, போளூர் பகுதிகளில் புதியதாக பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவக் கோரி வந்துள்ள விண்ணப்பங்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) திருவண்ணாமலையில் உள்ள பால் குளிர்ப்பதன நிலையத்தை தினம் 40,000 லிட்டர் வரை குளிர் செய்யும் அளவிற்கு விரிவுபடுத்தத் திட்டம் உள்ளது.

(ஆ) இவ்விரிவுபடுத்தும் பணி 1978-79-ல் தொடங்கி படிப்படியாகச் செயல்படுத்தப் பெறும்.

(இ) தேவையான அடிப்படை பணிகளை பலப்படுத்த செயல் முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால் : கிராமங்களில் பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வேண்டும் என்று ஏற்கனவே அதற்குப் பணம் கட்டிய கிராமங்கள் எவ்வளவு என்று அறிவிப்பீர்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : திருவண்ணாமலை பகுதியில் 14 கிராமங்களில் இருந்து பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் ஏற்படுத்துமாறு வேண்டுகோள் வந்துள்ளன. அவைகள் ஆராயப்பட்டு வருகின்றன என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் ; பரமக்குடியில் பால் பதனிடும் சென்டர் ஒன்று அமைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை இருந்து வருகிறது. எப்போது அது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பரமக்குடிபற்றி தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்